வாங்குகிருர்கள். அவ்வாறு வாங்குவது ஏன் என்று கேட்டால் ஹோல் சேலிலும் அவ்வாறுதான் வாங்குகிருர்கள் என்று சொல்கிருர்கள். இதைத் தடுக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** பொதுமக்கள் ஒத்துழைப்பு இல்லா விட்டால் நாம் என்றைக்கும் இதைத் தடுக்க முடியாது. பில்லிற்கு மேல் அதிகமாகப் பணம் வேண்டுமென்று கேட்டால் கொடுக்காமல் இருக்க வேண்டும். அவசரம் என்ற காரணத்திற்காக நாமும் பில்லுக்கு மேல் பணம் கொடுத்து வாங்குகிறேம். அதை எப்படி சர்க்கார் கண்காணிக்க முடியும்.

**திரு. து. ப. அழகமுத்து :** ஸார், கூட்டுறவுச் சங்கங்களில் உட்படாத தனிப்பட்ட நெசவாளர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் நூல் குறைவாக இருப் பதால் அதை அதிகப்படுத்த சர்க்காருக்கு உத்தேசமுண்டா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் அங்கத்தினருக்கு இன்றைய நிலை தெரியாது என்று நினைக்கிறேன். தற்போது ஒதுக்கியிருக்கக் கூடிய நூலை எடுக்கவே ஆள் இல்லை.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** ஸார், மில் அதிபர்கள் எக்ஸ் மில் ரேட்டுக்கு அதிகமாகவே பணம் '**premium**' என்ற பெயரால் வாங்கு கிருர்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அப்படி வாங்கினல் கொடுக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* 366 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken to make yarn available to handloom weavers at a fair price?

THE HON. SRI R. VENKATARAMAN : A statement [a] is placed on the table of the House.

**திரு. இராம. அரங்கண்ணல் :** ஸார், பட்டுத் தறியாளர்கள் தங்களுக்கு தேவையான ஜரிகை கிடைக்காமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிருர்கள். ஜரிகை மார்க்கொன்றுக்கு 80 ரூபாயிலிருந்து 100, 125 ரூபாய் வரையில் கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது. அதோடு கூட 100 ரூபாய் கட்டி லைசென்ஸ் வாங்கவேண்டிய நிர்பந்தமும் இருக்கிறது. கிட்டத்தட்ட 26,000 தொழிலாளர்கள் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிருர்கள். அவர்களு டைய கஷ்டத்தைப் போக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண் டிருக்கிருர்கள் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** தங்கக் கட்டுப்பாட்டினல் ஜரிகை வியாபாரம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மை. ஆனல் அவர்கள் கட்டவேண்டிய லைசென்ஸ் கட்டணம் 100 ரூபாயிலிருந்து 50 ரூபாயாகக் குறைக்கப்பட்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. மேலும் ஜரிகை கிடைப் பதற்கு ராஜ்ய சர்க்கார் மத்திய சர்க்காருக்கு எழுதி இருக்கிறது. இதைப் பற்றி ஒரு முடிவு எடுக்கப்பட்டவுடன் மற்ற விவரங்களைப் பற்றித் தெரிவிக் கிறேன்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** அந்தத் தறியாளர்கள் 50 ரூபாய் கட்டணம் கூட கொடுக்கக்கூடிய நிலைமையில் இல்லை. எம்.எல்.ஏ. போன் ருேரிடம் பெற்ற பொறுப்புள்ள அத்தாட்சிப் பத்திரங்களை காண்பித்தால் போதும் லைசென்ஸ் தரப்படும் என்று உத்திரவிட அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இந்த சர்க்கார் உத்திரவிட முடி யாது. இந்தச் சர்க்கார் இந்தக் கஷ்டத்தைப் போக்க டைரக்டர் ஆஃப் ஹானட்லூம்ஸ் (Director of Handlooms) மூலம் இதை வாங்கி

[a] Printed as Appendix on page 507.

**25th March 1963]**

விநியோகம் செய்யலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறது. அதைப்பற்றி கடிதப் போக்குவரத்து நடந்து கொண்டிருக்கிறது. முடிவு இன்னும் தெரியவில்லை.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** ஸார், ஜரிகை மார்க்குக்கு விலை நிர்ணயம் செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ? அந்த விதமான விலைகளை நிர்ண யிக்கவில்லை என்றால் ஜரிகை உற்பத்தியாளர்கள் சமயத்திற்குத் தகுந்தாற் போல் விலைகளைக் கூட்டி விற்பதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** விலை நிர்ணயித்து விட்டால் மட்டும் அதே விலைக்குக் கிடைக்குமென்று சொல்லிவிட முடியாது. பொதுவாக சப்ளை, டிமான்டைப் பொறுத்து விலை ஏறுவது இறங்குவதாக இருக்கும். கம்ப்ளீட் கன்ட்ரோல் கொண்டுவரவேண்டுமென்றால் ஜரிகை முதலியவற்றை சர்க்காரே எடுத்துக்கொள்ளவேண்டும். சர்க்கார் கார்டு வழங்கி விநியோகம் பண்ணவேண்டும். இதில் அனுபவித்த கஷ்டங்கள் தறியாளர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் அதை விரும்பவில்லை.

**திரு. ஆர். ரங்கசாமி :** ஸார், சில கைத்தறியாளர்கள் கட்டுப்பாடு செய்யப் பட்ட விலையில் நூல்களை வாங்கி நெசவு செய்யாமல் வெளியே அதிக விலைக்கு விற்கிறார்கள். அதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக் குமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** லாபம் சம்பாதிப்பது மனித இயல்பு. அதைத் தடுப்பது மிகவும் கஷ்டம்.

*Technical Education*

* 367 *Q* —SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to introduce short-term courses in Technical Education to increase the number of Technical personnel ; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) In view of the national emergency, short-term courses of three to six months duration have been started in Engineering Colleges for the training of craftsmen and wireless operators. Schemes to accelerate the production of large number of B.E. Degree holders by curtailing the periods of vacation, conducting separate three year B.E. degree courses for Science graduates and to start two year diploma courses, are now being drawn up.

**திரு. எஸ். மாதவன் :** தலைவர் அவர்களே, பி.யூ.சி. படித்தவர்களுக்கு டெக்னிஷன் கோர்ஸ் ஆரம்பிக்க அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ? விவரம் என்ன ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** எஸ். எஸ். எல். சி. எலிஜிபிளாக இருக்கிறவர்கள் எல்லோரும் பாலிடெக்னிக்கில் சேரலாம். பி.யூ.சி. படித்த வர்களும் சேரலாம். பூ.யூ.சி. படித்தவர்களுக்கு ஒரு வருஷம் குறை வாக பயிற்சி கொடுத்தால் போதும் என்று சொன்னால் சர்க்கார் ஏற்றுக் கொள்ள முடியாது.

**திரு. அ. தியாகராஜன் :** மூன்றாவது பாரம், நான்காவது பாரம் படித்தவர்களுக்கு ஜூனியர் பாலிடெக்னிக் அமைத்திருக்கிறார்கள். அது அரசாங்க அமைப்பிலிருக்கிறதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சர்க்கார்தான் அமைத்திருக்கிறார் கள். மூன்றாவது பாரம், நான்காவது பாரம் பாஸ் செய்தவர்களும், ஹைஸ்கூலில் படிக்கிறவர்களும் ஜூனியர் டெக்னிகல் ஸ்கூலில் படிக்கலாம்.